இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1994, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1994, ஜூன் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்*
***வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

***விலை : சதம் 60*** ***தபாற் செலவு : ரூபா 1.00***

**1994 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்.**

[1994, ஜூன் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 63/92

**தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

முன்னுரை.

"தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன் முன்னர் தம்பதெனியவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும்; அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவிருக்கின்றவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும்; (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தம்பதெனிய ரஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) தம்பதெனிய ரஜமகா விகாரையின் கட்டடங்களைப் பேணுதலில் உதவி புரிதல், அத்துடன் அவசியமானவாறும், அவசியமானபோதும் எவையேனும் புதிய கட்டடங்களை நிர்மாணித்தலும், பேணுதலும் ;

(ஆ) புத்த மதத்தைப் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடல், அத்துடன் சிங்கள, பாளி, சமஸ்கிரத மொழிகள் கற்கப்படுவதை மேம்படுத்தல் ;

(இ) தர்மதூத வேலையை இலங்கையிலும், வெளிநாட்டிலும் மேம்படுத்தல் ;

(ஈ) பௌத்த சாமனேரர்களுக்குப் பயிற்சி நிலையம், பிரிவேனை, பௌத்த மதப் பாடசாலைகள் முதலியவற்றைத் தாபித்தல்; அத்துடன் பௌத்த தர்மத்தைப் பற்றிய ஆராய்ச்சியை வளர்த்தல் ;

(உ) பௌத்தர்களிடையேயும், இடப்பரப்பிலுள்ள ஆட்களிடையேயும் மத உணர்ச்சியை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை நடாத்துதல்; அத்துடன்

(ஊ) உறுப்பினர்களின் ஆத்மீக, பண்பாட்டு, சமூக அத்துடன் உளம் சார் சேமநலனுக்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடக்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்கான தத்துவமும் அடங்கும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்களையும் அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் கொண்டுள்ள நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக இருத்தல் வேண்டும்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் எல்லா அசைவற்ற ஆதனங்களினதும் கட்டுக்காப்பு, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறும், அத்துடன் அவற்றுக்கிணங்கவும் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றிடம் இருத்தல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாதல் வேண்டும்.

7. (1) உறுப்பினர்களின் ஒரு பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களையும், நிறைவேற்றுக் குழுவையும், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையையும் தேர்ந்தெடுப்பதற்காகவும் அத்துடன் பல்வேறு அலுவலர்களின், சேவையாளர்களின், முகவர்களின், கடமைகளைப் புரிவதற்கும், கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவின் அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத்துக்குக்காலம் ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்பட வுள்ளனவும் மன்றத்துக்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

8. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று மன்றத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், அதற்குச் செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை கூட்டுத்தாபனம் வைத்திருக்க லாம்.

9. கூட்டுத்தாபனமானது, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவில் இருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கையேற்கவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாகும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டு மென்பது.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபன விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

12. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,307 ; (வெளிநாட்டு) ரூபா 1,949 ; முற்கொடுப்பனவாக டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 355, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.